**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.147/2021**
**Prosecution Witnesses: 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Caste | : |
| Father Name/ Husband Name | : ராசுநாயக்கர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1, 2 எதிரிகள் ஆஜர். 1, 2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(22.09.2025)**
**முதல் விசாரணை**

சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் கப்பலூரில் குடியிருந்து வருகிறேன். நான் செக்யூரிட்டியாக பணி செய்து பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 2 பேரையும் எனக்கு தெரியும். அ.சா.1 முத்துபாண்டியம்மாள், அ.சா.2 ஜெயக்கொடியை தெரியும். இவர்கள் அனைவரும் எனது பக்கத்து வீட்டைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 3 மணியளவில் நான் வேலை முடித்து தூங்கிகொண்டிருந்த போது சத்தம் கேட்டு நான் வந்து பார்த்த போது எங்களது தெருவில் எதிரி அழகர்சாமி கையில் கடப்பாறையுடன் இருந்தார். அவரது மகன் செல்வக்கண்ணன் என்பவரும் உடன் இருந்தார். ஜெயக்கொடி என்பவருடன் பிரச்சினை ஏற்பட்டு இருந்தது. ஜெயக்கொடி கீழே கிடந்தார். கீழே கிடந்த அவரது தலை உடைந்திருந்தது. சண்டை நடந்ததை நான் விலக்கிவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 24.07.2019 அன்று மதியம் 3 மணியளவில் அ.சா.1 ன் வீட்டின் கீழ்புறம் உள்ள சந்தில் ஆஜர் எதிரிகள் 2 பேரும் குழிதோண்டி கொண்டிருந்த போது அ.சா.1 முத்துபாண்டியம்மாள் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது எதற்காக குழிதோண்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் 2 பேரும் அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி அவரை பெண் என்றும் பாராமல் வன்கொடுமை செய்து மண்வெட்டி மற்றும் கடப்பாறையால் எதிரிகள் 2 பேரும் அ.சா.1 ஐ அடித்துக்காயம் ஏற்படுத்தி அதை தடுக்கவந்த அ.சா.1 ஜெயக்கொடியையும் அசிங்கமாக திட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இடம் சம்பந்தமாக பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். சாட்சிகள் எனக்கு உறவினர்களா என்றால் எதிரிகளும் உறவினர்கள் தான். நான் சாட்சிகளுக்கு உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை